## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் (சபை) மற்றும் அதன் துணைக் கம்பனிகள் உள்ளிட்ட தொகுதியின் (''தொகுதி'') 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளிகள் உள்ளிட்ட தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழ் மற்றும் 1979 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து சபையின் நிதிக்கூற்றுக்களின் மூலம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் முகாமைத்துவத்தினால் சபையைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் சபையின் தொடர்ந்தியங்கும் தன்மையுடன் தொடர்புடைய தகவல்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புகள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக சபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மற்றும் சபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்தலின் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக இருக்குமாயிருந்தால் எனது அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் காலவரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை**

**1.5.1.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 32 ஆம் பந்தி பிரகாரம் நியமத்தில் இடமளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவின மீதிகள் ஈடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படலாகாது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | | |
| (i) | ரூபா 16,414,192 ஆன நிதிச் செலவினங்களுக்கு எதிராக ரூபா 8,252,100 ஆன நிதி வருமானத்தை ஈடுசெய்து தேறிய நிதிச் செலவினமாக ரூபா 7,892,092 வருமானச் செலவினக் கூற்றில் வெளிக்காட்டப்பட்டிருந்தது. | சபையின் நிதிக்கூற்றுக்களில் நிச் செலவினங்களுக்கு நிதி வருமானத்தை ஈடு செய்திராததுடன் வருமானக் கூற்றில் வெளிக்காட்டப்பட்ட நிதிச் செலவினத்திற்கும் நிதி வருமானத்திற்கும் இடையிலான தேறிய மீதி குறிப்பு இல. 07 இல் காண்பிக்கப்பட்டு அக் குறிப்பின் கீழ் நிதி வருமானமும் நிதிச் | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 32 ஆம் பந்தியின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலவினமும் வெவ்வேறாக காண்பிக்கப்பட்டுள்ளன. | |
| (ii) | 03 பண்ணைகளாலும் தலைமை அலுவலகத்தாலும் பல்வேறு தரப்பினருக்கு செலுத்த வேண்டிய ரூபா 9,253,394 கூட்டுத்தொகையான மறைப் பெறுமதி வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் இருந்து கழிக்கப்பட்டு சபையின் நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நலன்புரிச் சங்கத்தால் ஏற்பட்ட செலவுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டுத் தவறு ஏற்பட்டுள்ளமையை ஒப்புக்கொள்கிறேன். இது 2023 கணக்குகளில் சீராக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 01 இன் 32 ஆம் பந்தியின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 15 மற்றும் 16 ஆம் பந்திகளின் பிரகாரம் சபையால் தற்காலிகமாக அறவிடப்படக்கூடிய வரி வேறுபாடுகளைக் கவனத்திற்கொண்டு மீளாய்வாண்டிற்காக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களிற்கு சீராக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் தற்காலிகமாக அறவிடப்படக்கூடிய வரிச் சொத்துக்கள் கருத்திற்கொள்ளப்பட்டு பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 12 இன் 15 ஆம் 16 ஆம் பந்திகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 50 மற்றும் 51 ஆம் பந்திகளின் பிரகாரம் பயன்படுத்துகின்ற சொத்துக்களின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு ஆக்கபூர்வமான ஆயுட்காலமொன்று மதிப்பிடப்பட்டு கணக்குகளில் மதிப்பீட்டு வேறுபாடொன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 270,276,535 பெறுமதியான முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் சபையால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றின் ஆக்கபூர்வமான ஆயட்காலத்தை மீளாய்வு செய்து வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்படுவதற்காக பாரிய கிரயத்தை ஏற்க வேண்டியுள்ளதுடன் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக இந் நிதியாண்டிற்குள் மீள்பெறுமதியிட இயலாது போயிற்று. நிதி நிலை சாதகமான நிலையை அடைந்ததை உடனடுத்து குறித்த மீள்பெறுமதியை மேற்கொள்வதாகத் தெரிவிக்கின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 16 இன் 50 ஆம் 51 ஆம் பந்திகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் 17 ஆம் பந்தியின் பிரகாரம் தலைமை முகாமைத்துவத் தரப்பினருக்கு செய்யப்படும் குறுகிய கால நலன் கொடுப்பனவு தொடர்பான மொத்தப் பெறுமதி தொடர்பாக தனித்தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் சபையால் அதன் பிரகாரம் மொத்தப் பெறுமதி தொடர்பாக தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் நியமத்தின் 26 (அ) பந்தியின் பிரகாரம் அரச நிறுவனம் ஒன்றால் வேறு ஓர் நிறுவனம் தொடர்பாக கட்டுப்பாடு, கூட்டான கட்டுப்பாடு அல்லது துணைக் கம்பனி ஒன்று இருக்கையில் இது தொடர்பாக வெளிப்படுத்த வேண்டியதுடன் சபையின் நிர்வகிப்புக் கம்பனியான வரையறுக்கப்பட்ட கோழிக் கட்டுப்பாட்டு அபிவிருத்தி தனியார் கம்பனி மற்றும் சபையின் இணைந்த கம்பனியான வரையறுக்கப்பட்ட மஹாவலி கால்நடை வியாபாரக் கம்பனி தொடர்பாக இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் நிதிக்கூற்றுக்களில் தலைமை முகாமைத்துவத் தரப்பினருக்கு மேற்கொள்ளப்படும் நலன்களுக்கு உரிய மொத்தப் பெறுமதி தொடர்பான தரப்பினரது கொடுக்கல் வாங்கல்கள் (Related party transaction) 3.7 கணககீட்டுக் குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டதுடன் இந்த அனைத்து கொடுப்பனவுகளும் பொதத்திறைசேரியின் சுற்றறிக்கைகளின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 24 இன் 17 ஆம் பந்தியின் படி தலைமை முகாமைத்துவத் தரப்பினருக்கு மேற்கொள்ளப்படும் குறுங்கால நலன் கொடுப்பனவுகள் தொடர்பான மொத்தப் பெறுமதி தொடர்பாக தனித்தனியாக வெளிப்படுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 5 (அ) ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் சபைக்குச் சொந்தமான ரூபா 2,379,113 பெறுமதியான தேக்கு மற்றும் மஹோகனிப் பயிர்ச்செய்கைகளும் நுகர்வு உயிரியல் விஞ்ஞானச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கொண்டுசெல்லும் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் (Plantation) கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகின்றேன். திருத்தங்கள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 5 (அ) ஆம் பந்தியின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் காணப்பட்ட ரூபா 922,968,226 பெறுமதியான தென்னை மரங்களும் ரூபா 1,892,260 பெறுமதியான மரமுந்திரிகை பயிர்ச்செய்கைகளும் ரூபா 36,434,446 பெறுமதியான இறப்பர் பயிர்ச்செய்கைகளும் இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 45 ஆம் பந்தியின் பிரகாரம் முதிர்ந்த மற்றும் முதிர்ச்சியற்றவையென தனித்தனியாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிராததுடன் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் மரமுந்திரிகை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கைகளுக்காக இதற்குரிய பெறுமானத்தேய்வுச் சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகின்றேன். திருத்தங்கள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 45 ஆம் பந்தியின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | இலங்கை நிதி அறிகையிடல் நியமம் 9 இன் 5.5.15 ஆம் பந்தியின் பிரகாரம் வியாபாரக்கடன்பட்டோர் மீதியான ரூபா 190,577,020 பிற்கால நட்ட இனங்காணல் அளவீட்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்ட முறை (expected credit loss method) பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கணிப்பிடப்பட்டிராததன் விளைவாக மீளாய்வாண்டில் வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் மிகை அல்லது பற்றாக்குறையாகக் கணக்கிடப்பட்டிருந்தன. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகின்றேன். திருத்தங்கள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். | இலங்கை நிதி அறிகையிடல் நியமம் 9 இன் 5.5.15 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.1.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையிடம் ரூபா 5,830,521,865 ஆன மொத்தச் சொத்துக்களும் ரூபா 1,368,684,056 ஆன மொத்தப் பொறுப்புகளும் ரூபா 4,461,837,809 ஆன உரிமை மீதிகளும் காணப்பட்டதுடன் கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகையில் ஒவ்வொரு பண்ணைகளின் நிதிக்கூற்றுக்கள், பேரேட்டுக் கணக்குகள், பட்டோலைகள் மற்றும் பண்ணைகளின் பரீட்சை மீதி வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒட்டுமொத்தமாக ஒன்றிணைந்த பரீட்சை மீதி ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 நிதியாண்டு முதல் ஒன்றிணைந்த பரீட்சை மீதி ஒன்றை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகையில் கூட்டமைப்பிற்காக ஒன்றிணைந்த பரீட்சை மீதி ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றைப் பரீட்சிக்கையில் சபையினால் நிர்வகிக்கப்படும் அறிக்கையை பரிசோதிக்கும் போது, கம்பனியின் மீதிகளுடன் சபை மீதிகள் சீராக்கப்படுகையில், மூலதன உயிரியல் சொத்துகள், வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர், வேறு நடைமுறைச் சொத்துக்கள் வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மற்றும் 12 மாதங்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதிகள் போன்ற விடயங்களின் ரூபா 35,273,661 ஆன வேறுபாடு காணப்பட்டது. | ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் நிர்வகிப்புக் கம்பனியின் மீதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளமையால் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டவாறு வேறுபாடு இல்லை எனத் தெரிவிக்கின்றேன். | நிர்வகிப்புக் கம்பனியின் மீதிகளுடன் சபை மீதிகள் சீராக்கப்பட்டு ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் வேறுபாடுகள் இல்லாத வகையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் 2013 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் ரூபா | இம் மீதி உருவான விதம் குறித்து எந்தவித பதிவும் கண்டுபிடிப்பதற்கு முடியாது | கணக்கு மீதி தொடர்பாக உரிய தகவல்களை |

| | | | |
|---|---|---|---|
| | 16,566,783 பெறுமதியான பிற்போடப்பட்ட செலவு மீதி காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அம் மீதி தொடர்பாக எந்தவித சான்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராமையால் துல்லியத் தன்மை உறுதிப்படுத்த முடியவில்லை. | போனமையால் புத்தகங்களில் இருந்து அகற்றப்படாது தொடர்ந்து பேணப்பட்டுள்ளன. 2024 நிதியாண்டில் நிதிப் பிரமாணம் 102 பின்பற்றி புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஈ) | சபையின் வெலிசறை பால் செயற்திட்டத்தின் விற்பனைக் கிரயத்தில் அதற்காக ஏற்கப்பட்ட நேரடிச் செலவுகள் மாத்திரமே சேர்க்கப்பட வேண்டிய போதிலும், பால் செயற்திட்டத்தில் தயிர் மற்றும் ஐஸ்கிரீமிற்காக ஏற்கப்பட்ட வழமையான செலவினமும் ஏனைய செலவினமான முறையே ரூபா 2,010,402 உம் ரூபா 2,674,990 உம் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் மொத்த இலாபம் ரூபா 4,685,392 ஆல் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | பால் செயற்திட்டத்தில் தயிர் மற்றும் ஐஸ்கிரீம் செயற்திட்டத்தின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஏற்கப்படும் ஏனைய செலவுகள் இதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளமையால், விற்பனைக் கிரயத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளமையால் மொத்த இலாபம் அதே தொகையால் குறைவான கணிப்பீட்டைக் கொண்டிருக்கவில்லை. | பால் செயற்திட்டத்தில் வழமையான செலவினமும் ஏனைய செலவினமும் சரியாகக் கணிப்பிடப்பட வேண்டும். |
| (உ) | நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 9.2 இன் படி நடைமுறையில் உள்ள வேலை தவிர ஏனைய ஆதன, கிரயம் மற்றும் உபகரணங்களில் 06 விடயங்கள் தொடர்பாக ஆரம்ப மீதிப் பெறுமதி ரூபா 4,102,752,178 ஆக இருந்த போதிலும் நிலையான சொத்துப் பதிவேட்டின் படி இப் பெறுமதி ரூபா 4,145,492,252 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 42,740,074 ஆன வேறுபாடு காணப்பட்டது. | நிலையான சொத்துப் பதிவேட்டின் படியும் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 9.2 இன் படியும் ஆரம்ப மீதிகளில் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்ட படி ரூபா 42,740,074 ஆன வேறுபாடு இல்லை என்பதைத் தெரிவிக்கிறேன். | நிதி அறிக்கையில் காணப்படும் மீதிக்கும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட மீதிக்கிடையே காணப்படும் வேறுபாடுகளை இனங்கண்டு தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதிய நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் கட்டிட பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 11,470,225 ஆன போதிலும் நிலையான சொத்துப் பதிவேட்டின் படி, அப் பெறுமதி ரூபா 11,218,821 ஆக இருந்தமையால் ரூபா 251,404 ஆன வேறுபாடு காணப்பட்டது. | நிலையான சொத்துப் பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் கட்டிடப் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 11,470,225 ஆனதுடன் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டவாறு வேறுபாடும் இல்லை என்பதைத் தெரிவிக்கிறேன். | நிதிக்கூற்றின் மீதியும் பதிவேடுகளில் உள்ள மீதிக்கும் இடையே நிலவும் வேறுபாட்டை இனங்கண்டு தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தொழிற்படு மூலதனச் சீராக்கத்தின் கீழ் வர்த்தக மற்றும் ஏனைய பெறவேண்டியவற்றின் | காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கையில் சீராக்கங்களின் கீழ் ஒரு வருடத்திற்குரிய நிலையான | காசுப்பாய்ச்சல் கூற்றைச் சரியாகத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேறுபாடு ரூபா 32,991,060 ஆகக் காணப்பட்ட போதிலும், அது ரூபா 60,175,815 எனவும், வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவற்றிலான வேறுபாட்டுப் பெறுமதி ரூபா 24,000,563 ஆகவும் இருக்க வேண்டிய போதிலும், அது ரூ.17,704,695 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வைப்பு வட்டித் தொகையை இலாபத்தை மீளச் சீராக்கி (add back) உள்ளபடியாக நிலையான வைப்பிற்குக் கிடைத்த வட்டித்தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாட்டின் மூலம் உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையால் வர்த்தக மற்றும் ஏனைய பெறுவனவுகளின் கீழ் உள்ள பெவேண்டிய நிலையான வைப்பு வட்டித் தொகை மற்றும் ஏனைய பெறுவனவுகளின் கீழ் உள்ள வருடத்திற்குரிய ஐயக் கடன் ஒதுக்கம் மற்றும் பொருளாதார சேவைக் கட்டணம் காசுப் பாய்ச்சலில் சீராக்கங்களின் கீழ் சீராக்கப்பட்டுள்ளமையால் அத் தொகை நீக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்றில் வர்த்தக மற்றும் ஏனைய பெறுவனவு வேறுபாடு சீராக்கப்பட்டுள்ளது. காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கையில் சீராக்கங்களின் கீழ் ஒரு வருடத்திற்குரிய பணிக்கொடை தொடர்பாக சீராக்கங்கள் வேறாக மேற்கொள்ளப்படுவதனாலும் செலுத்தப்பட்ட பணிக்கொடைத் தொகை வேறாகப் பதிவு செய்யப்படுவதனாலும் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவையின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள செலுத்த வேண்டிய பணிக்கொடைத் தொகை கழிக்கப்பட்டு வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் வேறுபாடு எடுக்கப்பட்டிடுள்ளது. | |
| (ஏ) | சபையின் நிதிக்கூற்றுக்களில் உயிரியல் சொத்துகளின் (மிருகங்கள்) பெறுமதியைக் காண்பிக்கையில் அந்த மிருகங்களின் ஆண்டு இறுதியில் உள்ள பெறுமதியிலிருந்து கைக்குத் தேறாத போக்கிற்காக 10% அதாவது ரூபா 126,262,781 குறைத்துக் காண்பிக்கபப்பட்டிருந்தது. இந்த மிருகங்கள் ஆண்டு இறுதியில் | இலங்கை கணக்காய்வு நியம இல. 41 இன் படி, மிருகங்கள் நியாயமான பெறுமதிக்கு ஐந்தொகைத் திகதியில் மதிப்பிட்டதை அடுத்து அந்த மொத்த மிருகங்களின் எண்ணிக்கையும் கணக்கீட்டுக் காலப்பகுதியின் பின்னர் கிடைக்கப்பெறாது போகும் | உயிரியல் ரீதியான சொத்துகளின் (மிருகங்கள்) பெறுமதியைத் துல்லியமாகக் காண்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியாயமான பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படுகையில் அனைத்துக் காரணிகளும் கவனத்தில் கொள்ளப்பட்டு நியாயப் பெறுமதிக்கு பெறுமதியிடப்படுவதனால் மீள 10% குறைப்பின் காரணமாக மிருகங்களின் பெறுமதி அத் தொகையால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இயலுமை உள்ளது. இதன் படி உயிரியல் சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 10% ஆன மதிப்பீட்டு ரீதியான தேறாத இலாப ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஐ) | மகாபெரியதென்ன பண்ணையின் இருப்பு அறிக்கையின் படி, 3,590 எண்ணிக்கையான பொய்லர் கோழிகளின் இருப்பு ஆண்டு இறுதி இருப்பாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் சபை நிதிக்கூற்றுக்களில் அல்லது பண்ணை நிதிக்கூற்றுக்களில் அவ் இருப்புகள் தொடர்பாக வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை எனவும் அண்ணளவாக ஒரு பறவையின் கிலோ கிராமேனும் உள்ளதா என்பதனை கருத்திற்கொள்கையில் சபையின் உயிரியல் சொத்துக்களின் மதிப்பீட்டுச் சுற்றறிக்கையின் படி, கிலோகிராமுக்கான ரூபா 215 ஆல் பெருக்கும் போது ஏறத்தாழ ரூபா 771,850 பொய்லர் கோழிகளின் இருப்பு தொடர்பாக வெளியிடப்படவில்லை. | சபையின் கணக்கீட்டுக் கொள்கைகளின் படி, கோழிகளின் பெறுமதி மதிப்பிடப்படுவதில்லை, மேலும் செலவு ஒத்திவைக்கப்பட்ட செலவாக இனங்காணப்பட்டுள்ளது. அதன் படி, மஹாபெரியதென்ன பண்ணையில் பிராய்லர் கோழி இருப்பிற்கு உரிய கிரயம் கணக்கிடப்பட்டுள்ளதுடன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் கோழிகளின் எண்ணிக்கை மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளது. சரக்கு அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | உயிரியல் சொத்துக்களின் (விலங்குகள்) பெறுமதி துல்லியமாகக் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | வெலிகந்த பண்ணையின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, ஆண்டின் இறுதியில் உள்ளவாறு இருக்க வேண்டிய பசு மாடுகளின் எண்ணிக்கை 453 ஆக இருக்க வேண்டிய போதிலும் 145 பசு மாடுகள் பற்றாக்குறையாக இருந்தமை பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் சபையின் நிதிக்கூற்றுக்களிலும் பண்ணை நிதிக்கூற்றுக்களிலும் மூலதனமாக்கப்பட்ட உயிரியல் சொத்து மீதியாக 453 பசு மாடுகளிற்கு உரிய பெறுமதியாக ரூபா 17,916,830 காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, ஏறத்தாழ இம் மீதியில் ரூபா 5,734,968 ஆன வேறுபாடு உள்ளமையும் மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டின் போதும் 183 பசுமாடுகளின் பற்றாக்குறை இருந்த போதிலும் அந்த பசு மாடுகளின் பெறுமதி ரூபா 6,283,120 தொடர்பாக நிறுவனத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெலிகந்த பண்ணையில் உள்ள பசுமாடுகள் மேய்ச்சல் விலங்குகளானதுடன் அவை உணவுக்காக பண்ணையில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டதை அடுத்து வறண்ட காலங்களில் அவற்றை மீண்டும் பண்ணைக்கு வருவிப்பதற்கு சிரமமாக இருந்தது. இந்த விலங்குகளை மேய்ப்பதற்குப் பல நாட்கள் ஆகும், எனவே அவற்றை குறுகிய காலத்தில் மெய்மையாய்வின் போது மொத்த விலங்கின எண்ணிக்கையையும் மெய்மையாய்வு செய்வதற்கான இயலுமை மிகக் குறைவானதாகும். மேலும், முழுமையான விசாரணை இன்றி பசுக்கள் குறைவாக உள்ளமை குறித்து குறிப்பிட்டு புத்தகங்களில் இருந்து விலங்குகளின் பெறுமதியைப் | |

| | | | |
|---|---|---|---|
| | | பதிவளிப்பதற்கான இயலுமை இல்லை. | |
| (ஓ) | ரிதியகம பண்ணையில் ஆண்டு இறுதியில் பசு மாடுகளின் இருப்பு ரூபா 4,315,866 ஆன மீதி சபையின் நிதிக்கூற்றுகளில் உயிரியல் சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அவ் இருப்பு சபையின் பொது இருப்புகளிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தன. | ரிதியகம பண்ணையால் இறக்குமதி செய்யப்பட்ட விந்து இருப்பின் பெறுமதி ரூபா 4,315,886 ஆனதுடன் இவை இறக்குமதி செய்யப்பட்ட பசுமாடுகளின் இருப்பு அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பண்ணையில் விந்துகளுக்குப் பதிலாக இறக்குமதி செய்யப்பட்ட பசுமாடுகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது. | பசுமாடுகளின் இருப்பான ரூபா 4,315,866 ஆன மீதி உயிரியல் சொத்துக்களில் (விலங்குகள்)எனக் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஔ) | மெனிக்பாலம் மற்றும் போபத்தலாவ போன்ற பண்ணைகளில் முறையே 776 மற்றும் 207 கறவை மாடுகள் கணக்கிடப்பட்டன, அந்த விலங்குகளின் சராசரி தினசரி பால் உற்பத்தி முறையே 13.2 லீட்டர் ஆகவும் 11 லீட்டர் ஆகவும் கருதப்பட்டு முறையே ரூபா 93,518,322 ஆகவும் ரூபா 16,047,590 ஆகவும் பெறுமதி கணிப்பிடப்பட்டிருந்ததுடன் கறவை மாட்டின் உண்மையான பால் உற்பத்திக்கு பதிலாக, அவ்வாறு சராசரி மதிப்பைப் பயன்படுத்தி இருப்பது தவறானமையால் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் விலங்குகளின் பெறுமதி மிகைப்படுத்தப்பட்டு அல்லது குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது. | ஒரு பிழை ஏற்பட்டுள்ளதாக ஒப்புக் கொள்ளப்பட்டு, அடுத்த நிதியாண்டில் இருந்து சீராக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | கறவை மாடுகளின் மதிப்பை துல்லியமாக கணக்கிட வேண்டும். |
| (க) | சபையின் ஏனைய பொது இருப்பின் கீழ், மகாபெரியதென்ன பண்ணையின் பொது இருப்பாக ரூபா 8,190,602 சேர்க்கப்பட்டிருந்த போதிலும் பண்ணையின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி அம் மீதி ரூபா 9,027,155 ஆனமையால் ரூபா 836,553 தொகையான வேறுபாடு நிலவியது. | புதிலளிக்கப்படவில்லை. | பண்ணையின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி மீதி மற்றும் பொது இருப்பில் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |
| (கா) | சபை நிதிக்கூற்றுக்களில் விவசாயிகளின் அறக்கட்டளை நிதியிலிருந்து பெறப்பட்ட கடன் மீதித் | விவசாயிகள் அறக்கட்டளை நிதி சபைக்கு 2021 திசெம்பர் இறுதியில் வழங்கப்பட்ட | விவசாயிகள் அறக்கட்டளை நிதியிலிருந்து |

| | | |
|---|---|---|
| தொகையாக ரூபா 60,412,700 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அம் மீதிக்கு உரிய விவசாய அமைச்சின் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் படி ரூபா 60,812,700 எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையால் இம் மீதியில் ரூபா 400,000 ஆன வேறுபாடு நிலவிய போதிலும் அவ் வேறுபாடுகளை ஆராய்ந்து தீர்த்துவைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காசோலைகள் 2021 திசெம்பர் மாத இறுதி வரையில் செலுத்தப்படவில்லை. விவசாயிகள் அறக்கட்டளை நிதிய சபைக் கணக்குகளில் இருந்து இந்தத் தொகை கழிக்கப்படவில்லை. | பெறப்பட்ட கடன் மீதி மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் படி மீதியில் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிந்து தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.1.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களுடன் அவற்றிற்கு உரிய பட்டோலைகைள் மற்றும் பண்ணை நிதிக்கூற்றுக்கள் பரீட்சிக்கையில் 16 கணக்குகள் தொடர்பாக ரூபா 313,035,860 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அலுவலகக் கடன்பட்டோருக்காக ரூபா 2,443,537 அறவிடமுடியாக் கடன்களுக்கான ஒதுக்கீடு, தலைமை அலுவலகத்தின் 05 ஆண்டுகளுக்கும் மேலான கடனாளிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டபூர்வ கடன்பட்டோருக்காக மீள ரூபா 5,821,542 ஆன 100% அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடு, பட்டோலையில் தலைமை அலுவலக விற்பனைக் கூடத்தில் 2019 ஆம் ஆண்டின் ஒக்டோபர் - திசெம்பர் காலாண்டிற்கு உரித்துடைய ரூபா 111,381 தொகையான பொருளாதார சேவைக் கட்டணம் உள்ளடங்கி இருந்தமை, தேறாத இலாபத்தை கருத்திற்கொண்டிராமை, பால் செயற்திட்டம் சகோதரப் பண்ணைக்கு விற்பனை செய்த விற்பனைகளின் கூட்டுத்தொகை கணக்காய்வு அறிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்டிராமை, கல்பொகுண பண்ணையின் நிதிக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள தேங்காய் மற்றும் கொப்பரா மீதி, பசு மாட்டுச் செயற் திட்ட வருமான மீதியும் கோழிச் செயற் திட்டத்தின் மீதி ஆகியவை சபையின் பிரதான செயற்திட்ட | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதியுடன் பட்டோலைகளின் பெறுமதி சமனாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

வருமானங்கள் பட்டோலைகளில் இருந்து வேறுபட்டிருந்தமை, ரிதியகம மற்றும் கல்போகுண பண்ணைகளில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் ஏனைய சொத்துக்களின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 1,927,368 மற்றும் ரூபா 58,179 ஆன மேய்ச்சல் நில மேம்பாட்டுச் செலவுகள், சபையின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் மேய்ச்சல் நில மேம்பாட்டுச் செலவுகள் (Pasture) கீழ் சேர்க்கப்பட்டுள்ளதுடன் மெல்சிரிபுர பண்ணையின் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டவாறு ரூபா 1,125,135 தொகையான வேறுபாடு இல்லை என நான் தெரிவிக்கிறேன். வெலிசறை பால் செயற்திட்டத்தின் விற்பனை நிலையங்களின் கீழ் உள்ள இருப்பு வெலிசறை பால் செயற்திட்டத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையிலும் பண்ணையில் உள்ள இருப்பு வெலிசறை பண்ணையின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டிருந்தமை, செலவுக் கணக்கிலிருந்து தொடர்புடைய காகிதாதிகள் அலுவலக காகிதாதி இருப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிராமை போன்ற காரணங்களால் இவ் வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன.

### 1.5.1.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 927,278,481 மதிப்புள்ள 12 பொருட்கள் தொடர்பான விரிவான பட்டோலைகள், வங்கி மீதிகள் மற்றும் காசு மீதிகள் உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வின் நோக்கெல்லை வரையறுக்கப்பட்டுள்ளது. தலைமை அலுவலகம் மற்றும் தலைமை அலுவலக பால் விற்பனை கடையின் ரொக்க இருப்பை உறுதிப்படுத்தும் தொடர்புடைய லெட்ஜர் பக்கங்களை நான் இணைக்கிறேன். தணிக்கைக்குத் தேவையான எழுத்துப்பூர்வ சான்றுகள் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் பால் செயற்திட்டத்தின் இணக்கம் செய்யப்படாத இருப்பு மீதி ரூபா 25,690,247 குறித்து தனியான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் யூஎச்சீ இருப்பு மீதி தலைமை அலுவலக இருப்பு மீதியில் உள்ளடங்கும் வகையில் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் பட்டோலை ஒன்று சமர்ப்பிக்கப்படவில்லை. கணக்காய்வு அறிக்கையில் வெலிசர பண்ணையில் டிலைட் செயற்திட்டத்திற்கு உரிய வங்கி மீதியாக வெலிசர பண்ணையின் நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்ட வங்கி மீதியான ரூபா 76,107 ஆனதுடன் அதற்குரிய மீதி வங்கியால் வழங்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் நடைமுறைக் கணக்கு இல. 119 - 1001 – 4 – 0002113 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தலைமைக்காரியாலயத்தின், தலைமைக்காரியாலயத்தின் பால் விற்பனைக் கூடத்தின் காசு மீதியை உறுதிப்படுத்துவதற்கான பேரேட்டுப் பக்கம் இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். | கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 வரையறுக்கப்பட்ட இலங்கை கோழி வளர்ப்பு மேம்பாட்டு அபிவிருத்தி தனியார் கம்பனி

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் நிதிக்கூற்றுக்களின் படி, இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனியில் இருந்து பெற வேண்டிய பெறுமதி ரூபா 4,218,655 ஆக இருந்த போதிலும், அந்தக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி அப் பெறுமதி ரூபா 1,983,595 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 2,235,066 வேறுபாடு காணப்பட்டது. | வரையறுக்கப்பட்ட கோழி வளர்ப்பு மேம்பாட்டு அபிவிருத்தி தனியார் கம்பனி மற்றும் மஹாவலி கால்நடை வியாபாரக் கம்பனி எனும் இரண்டு கம்பனிகளின் கொடுக்கல்வாங்கல்களில் ஏற்பட்ட பரிவர்த்தனைகளில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இந்தக் கம்பனிகள் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி தேசிய | சபையின் நிதிக்கூற்றுக்களின் படி வரையறுக்கப்பட்ட இ லங்கை கோழி மேம்பாட்டு அபிவிருத்தி தனியார் கம்பனியில் இருந்து பெறவேண்டிய பெறுமதியும் அக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படியான |

| | | | |
|---|---|---|---|
| | | பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையால் கையகப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அப்போது இக் கம்பனிகளில் நிலவும் தவறுகள் சீராக்கப்படும். | பெறுமதிக்கும் இடையே நிலவும் வேறுபாட்டை இனங் கண்டு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 பெவேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் படி சேவைகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 206,147,457 இல் ரூபா 78,434,501 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதியானதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இக் கடன்பட்டோரிடம் இருந்து எந்த வகையிலும் அறவிடப்பட இயலாதென இனங்காணப்பட்ட கடன்பட்டோர் ரூபா 247,730.38 தொகையும் வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோரான ரூபா 5,361,517.75 புத்தகங்களில் இருந்து பதிவளிக்கப்பட்டதுடன் எஞ்சிய கடன்பட்டோரின் ஓர் பகுதிக்காக இது வரையிலும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளளது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கின்றேன். | கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த வெலிகந்த பண்ணை முகாமையாளரால் பெறவேண்டிய தொகைப் பற்றாக்குறை மற்றும் உயிரியல் சொத்துக்களின் பற்றாக்குறை முறையே ரூபா 619,484 ஆகவும் ரூபா 10,287,510 ஆகவும் காணப்பட்டதுடன் தற்போது அந்த முகாமையாளர் உயிருடன் இன்மையால் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான இயலுமை இல் லாத போதிலும் இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு ஒன்று விசாரிக்கப்பட்டு வருவதுடன் பொறுப்பு வாய்ந்தவர்கள் இது வரையில் குறிப்பாக இனங்காணப்பட்டிராமையால் எதிர்வரும் நடவடிக்கைகளை எடுக்க முடியாதுள்ளது. மோசடி விசாரணைப் பிரிவில் குறித்த செயற்பாடுகள் முடிவுற்றதை அடுத்து அதன் கட்டளைகளுக்கு இணங்க எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்குள்ளது. | முகாமையாளரால் அறவிடப்பட வேண்டிய பணப்பற்றாக்குறை மற்றும் விஞ்ஞான ரீதியான சொத்துக்களின் பற்றாக்குறையை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் படி, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இருந்து பெறவேண்டிய ரூபா 2,257,460 | இப் பிரச்சனை தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு எதிர்வரும் | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து பெறவேண்டிய மீதியை |

| | | |
|---|---|---|
| தொகையும் பெறவேண்டிய பெறுமதி சேர் வரித் தொகையான ரூபா 9,109,693 தொடர்பாக அறவிடுவதற்து எவ்வித நடவடிக்கையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் நிதிக்கூற்றுக்களில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் ஒரு வருடத்திற்கு மேலான காலமாக நிலவிவரும் மற்றும் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத ரூபா 184,943,042 தொகையான மீதி காணப்பட்டது. | ஒரு வருடத்திற்கு மேலான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதி உள்ளடங்கலான ரூபா 17.2 மில்லியன் இதுவரையில் தீர்க்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | கணக்காண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்று மற்றும் வரைவு வருடாந்த அறிக்கையை கணக்காய்வாரளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2024 யூலை 05 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | குறித்த காலப்பகுதிக்குள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் கடந்த சில ஆண்டுகளின் நிதி அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான இயலுமை இருக்கவில்லை. | கணக்காண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்று மற்றும் வரைவு வருடாந்த அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் கூட்டமைப்பின் வரிக்கு முன்னரான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 173,420,992 இலாபமானதுடன் இதற்கு நேர்மாறான முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 22,304,958 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 195,725,950 ஆன விருத்தி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த விருத்திக்கு கம்பனியின் வருமான அதிகரிப்பு, விநியோகச் செலவினங்களின் குறைவு முக்கிய காரணமாக இருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் நடைமுறை சொத்து விகிதம், விரைவு சொத்து விகிதம், மொத்த இலாப விகிதம் முறையே 1.14:1 ஆகவும் 0.617:1 ஆகவும் நூற்றுக்கு 33.3 ஆகவும் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் அவ் விகிதங்கள் முறையே 0.848:1 ஆகவும் 0.536:1 ஆகவும் நூற்றுக்கு 31.9 ஆகவும் காணப்பட்டன. அதன் பிரகாரம் இவ் விகிதங்களில் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டதுடன் நடைமுறை சொத்து விகிதம், விரைவு சொத்து விகிதம் பலவீனமான நிலையில் உள்ளதால் தொழிற்பாட்டு மூலதன பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. மேலும் மொத்த இலாப விகித அதிகரிப்பிற்கு உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் நியாயப் பெறுமதி உயர்வடைந்தமை முக்கிய காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையால் இரண்டு பண்ணைகளின் ரூபா 1,979,984 கிரயமான 02 உணவு பதப்படுத்தும் இயந்திரங்களும், மற்றொரு பண்ணையில் 2016 ஆம் ஆண்டில் ரூபா 3,853,490 தொகையான மூலதனச் செலவில் பழுதுபார்க்கப்பட்ட உணவு பதப்படுத்தும் இயந்திரமும், மற்றைய இரண்டு பண்ணைகளில் மதிப்பு குறிப்பிடப்படாத 04 இயந்திரங்களும் காணப்படுவதுடன் அவ் இயந்திரங்கள் மீளாய்வாண்டு வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன. | குறித்த இயந்திரங்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளதுடன் நாட்டில் நிலவும் மூலப்பொருட்களின் பற்றாக்குறை காரணமாக, இந்த இயந்திரங்களை இயக்குவது சிக்கலாக இருந்தது. ஆகையால் பண்ணை பூர்த்திப் பொருட்கள் வெளிப்புறத் தரப்பினரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இவ் இய ந்திரங்களின் பெறுமதி எந்தவித குறைவும் ஏற்படவில்லை. | உணவு பதனீட்டு இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் ஆய்வு செய்கையில் சபைக்கு உரித்தான 07 துறைகளின் 260 பண்டகப் பொருட்களின் பற்றாக்குறை காணப்பட்டதுடன் இது தொடர்பாக சபையால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவித்து எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதற்காகச் செயற்படுவேன். | பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கையில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் குறித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மஹாபெரியதென்னவில் அமைந்துள்ள 517 பேர்ச் காணி ஒரு தனியார் கம்பனியுடன் ரூபா 24,418,300 உறுதியளிப்பில் 99 வருட காலத்திற்கும் வெலிசரவில் அமைந்துள்ள 31 | 1992 ஒக்டோபர் 28 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒருமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, மஹாபெரியதென்ன பண்ணையின் 517 ஏக்கர் காணி 1996 முதல் 99 | சபையிடம் உள்ள காணிகளைக் குத்தகைக்கிடுகையில் 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் |

பேர்ச் அளவிலான இன்னுமோர் காணி ஒரு தனியார் ஆடை கம்பனியுடன் ரூபா 31,600,800 இற்கு உறுதியளிக்கப்பட்டு 30 வருட காலத்திற்கு குத்தகைக்கிடுவதற்காக உடன்படிக்கையிடப்பட்டிருந்தது. 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாயச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 1975 பெப்ரவரி 14 ஆம் திகதிய 157 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் படி, சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இக் காணி அச் செயற்பாடுகளுக்கு உரித்தற்ற நடவடிக்கைகளிற்காகக் குத்தகைக்கிடப்பட்டிருந்தன.

ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டது. மேலும், அப்போதைய ஜனாதிபதி, ராகமவில் உள்ள வெலிசறை பண்ணையில் இருந்து 03 ஏக்கர் 0.31 பேர்ச் (1.2152 ஹெக்டேர்) காணியை அழகுக் கலை வடிவமைப்பு நிலையத்தை நடாத்துவதற்காக வழங்கப்படுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

1975 பெப்ரவரி 14 ஆம் திகதிய 157 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் படி சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளுடன் தொடர்புடைய நோக்கங்களுக்காக வேண்டும்.